பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்வியறிவு பெற்றிட திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துகிறோம்:

# தமிழ்நாடு சமூக நீதிக் கொள்கையை செயல்படுத்துவதில் நாட்டிலேயே முன்மாதிரியாகத் திகழ்கிறது!

## பிற்படுத்தப்பட்டோர் - கதர் துறை மானியத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பதிலுரை!

**சென்னை, ஜூலை 1 - சட்டப்பேரவையில் பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பதிலுரையில் தமிழ்நாடு சமூக நீதிக்கொள்கையை செயல்படுத்துவதில் நாட்டிலேயே முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.**

பிற்படுத்தப்பட்டோர் , மிகவும் பிற்படுத்தப்பட்.டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் - கைவினைப் பொருட்கள் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பதிலுரை வருமாறு:-

“தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்!”

தந்தை பெரியார். தமிழுக்குத் தொண்டு செய்தவன் தமிழ் வீரன். சென்னை என்ற பெயர் மாற்றி செந்தமிழ் நாடு என்ற பெயர் வைத்தார் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். கொட்டுகின்ற மழையில் ராபின்சன் பூங்காவில், திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் இயக்கத்தைத் தொடங்கிய போது, மிட்டாமிராசுகள், பட்டாக்காரர்கள், பெருந்தனக்காரர்கள், ஆலய அதிபர்கள், தொழிலதிபர்கள் இவர்களை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியவர் பேரறிஞர்

## 27 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்திட காரணமாகத் திகழ்ந்தவர் நமது முதல்வர்!

அண்ணா அவர்கள். அத்தகைய மாபெரும் தலைவருடைய வழிகாட்டுதலிலே தான் என்னைப் போன்றவர்கள் இன்றைக்கு அமைச்சர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, பலபேர் இன்றைக்கு ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினரைச் சேர்ந்த மக்களெல்லாம் வந்திருக்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1957லே எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள், எதிரிக் கட்சியாக செயல்படக் கூடாது. எதிர்க்கட்சியாகச் செயல்பட வேண்டும். ஆக்கப்பூர்வமான யோசனைகளைச் சொல்ல வேண்டுமே தவிர, எதிரிக் கட்சி என்ற நினைப்பிலே செயல்பட்டால் அது ஜனநாயகமாக இருக்காது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார். அந்தளவிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் இயக்கம் நடத்துகின்ற அருமை நண்பர்கள் எதிரிக் கட்சியாக இல்லாமல், எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், இட ஒதுக்கீடு என்றாலே கொடிபிடித்து, திராவிட முன்னேற்றக் கழகம்தான் இட ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினைகளைக் கையாளுகின்ற ஓர் இயக்கம். கொடிபிடித்து, கொள்கை முழக்கமிட்டு, 14 வயதிலேயே தன்னுடைய திருவாரூர் வீதியிலே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சென்றார் என்றால், அவர் திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற இயக்கத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, மணமேடையிலே இருக்கின்ற நேரத்திலேகூட போராட்டம் என்ற உணர்வோடு அன்றைக்கு இந்தச் சமூக நீதிக்காகப் பாடுபட்டார் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

### கலைஞரால் பாராட்டப்பட்ட முதல்வர்!

அவர் வாழ்நாளெல்லாம்நான் அவரோடு குறுகிய காலத்திலே பழகியிருக்கிறேன். 3 ஆண்டுக்காலம்தான் நான் அவரோடு பழகியிருக்கிறேன். ஆனால், அவருடைய அன்பு, அவர் செலுத்துகின்ற அந்தப் பாசம் மிகவும் இனிமையானது. அப்படிப்பட்ட ஒரு மாபெரும் தலைவனை நாம் இழந்து விட்டோமே என்ற நினைவு இருக்கின்றபோதுதான் நம்முடைய தளபதி அவர்கள் நமக்குக் கிடைத்தார்கள். திராவிட இயக்கத்தினுடைய—அவர் சொன்னாரே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல மகளிருக்கான திட்டங்களையும் சொன்னதையும் செய்தார்; சொல்லாததையும் செய்கின்ற தலைவராக இன்றைக்கு தளபதி அவர்கள் உருவெடுத்திருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையிலேதான் 40க்கு 40. உதாரணமாக, இராமநாதபுரம் தொகுதியிலே 1 இலட்சத்து 22 ஆயிரம் வாக்குகளிலே வெற்றிபெற்ற நம்முடைய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி இன்றைக்கு 1 இலட்சத்து 72 ஆயிரம் வாக்குகளிலே 50,000 வாக்குகள் அதிகமாகப் பெற்றிருக்கிறார்களென்றால், அதற்குக் காரணம் அவருடைய உழைப்பு, உழைப்பு, உழைப்பு. கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர் நம்முடைய தளபதி அவர்கள். உழைப்பு, உழைப்பு, உழைப்பு. என்றாலே நம்முடைய தளபதி என்று இன்றைக்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் என்று பாராட்டப்பட்டவர். இங்கு வந்திருக்கிற அருமை அண்ணன் நீர்வளத் துறை அமைச்சர். பொதுச் செயலாளர். மூத்த அமைச்சர் நேரு அவர்கள், ஐ.பெரியசாமி அவர்கள். போன்றவர்களெல்லாம் இங்க இருக்கிறார்கள். மூத்த அமைச்சர்கள், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே எனக்கு வாக்களித்து பெருவாரியாக வெற்றிபெறச் செய்த முதுகுளத்தூர் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தென் மாவட்டங்களிலே அதிக அளவில் சாதிக் கலவரமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் நேற்றைக்கு சொன்னார்கள். இன்றைக்கு எந்த சாதிக் கலவரமும் கிடையாது. இப்படிப்பட்ட எந்த நிகழ்வும் இல்லாமல், இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் லேசாக ஆரம்பித்தார். ஆரம்பித்தவுடன் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டதால் தெளிவாகச் சொல்கிறேன். நம்முடைய முதலமைச்சர் தளபதியார் அவர்கள் வந்ததற்குப்பிறகு bye pass சாலை அமைத்து நம்முடைய தேவர் நினைவிடத்திற்கு சம்பந்தமில்லாமல் செல்கின்ற அளவிற்கு 31 கோடி ரூபாயை நமக்கு அந்தப் பகுதியிலே ஒதுக்கி மிக அருமையாக இன்றைக்கு வந்து அஞ்சலி செலுத்துகின்ற ஒரு நிலையை உருவாக்கியவர் முதலமைச்சர் அவர்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எந்தவிதமான, வாக்குகள் வித்தியாசத்தில் சாதி வித்தியாசமே அங்கே பார்க்க முடியாது. பார்ப்பது கிடையாது. நான் நிற்பதே தேவர் தொகுதியிலே தான். 30,000 வாக்குகளில் நான் வெற்றி பெற்றேனென்றால் எல்லோரும் வாக்களிப்பார்கள். ஆகவே, இன்றைக்கு அப்படிப்பட்ட நிலை அந்தப் பகுதியில் கிடையாது. ஆகவே, எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம். தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய பகைவர்களையெல்லாம் தன்னுடைய பகுத்தறிவால் வென்றார். அவருடைய ஆற்றல் என்பது மிக எளிதான ஆற்றல் கிடையாது. சமூக நீதி social justice. நம்முடைய அய்யா அவர்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். அவர்கள் இருந்தபோது நான் தெளிவாக சொன்னேன். 10.5 சதவிகித இட ஒதுக்கீடு என்பதால் நம்முடைய மக்களுக்குப் பயன் இல்லை.

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களோடு—ஏனென்று சொன்னால் இந்த விவாதத்தை இன்றைக்கு வைத்திருக்க வேண்டும். நம்முடைய அண்ணன்ஜி.கே. மணி அவர்கள் நேற்றைக்கே வைத்துவிட்டார். நான் பதில் சொல்ல முடியாது. அவர் அந்த அடிப்படையிலே பதில் சொல்லியிருக்கிறார். நான் பதில் சொல்வதற்கு தயாராக இல்லை. ஏனென்றால் மானியக் கோரிக்கை இன்றைக்கு வருகின்ற போது அவர் கேட்டால் நான் பதில் சொல்ல முடியும்.

ஆகவே, 10.5 சதவிகித இட ஒதுக்கீடு என்பது வன்னியர் மக்களுக்கு எதிரானது அல்ல. கலைஞர் அவர்கள்தான் 50 சதவிகிதத்திலே 20 சதவிகிதம் அந்த மக்களுக்கு ஒதுக்கித் தந்த மாபெரும் தலைவர் நம்முடைய கலைஞர் அவர்கள் என்பதை நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும். தேர்தலுக்காக பல பேர் சொல்லலாம். நம்முடைய அய்யா அவர்களிடத்திலே நாம் தெளிவாகச் சொன்னோம். அவர் சொன்னதெல்லாம் உண்மை. இல்லை, இல்லை. இன்றைக்குக் கேட்டால் நான் சொல்லலாம். நேற்றைக்குக் கேட்டால் அவர்தான் சொல்வார். நான் பதில் சொல்ல முடியாது. சம்பந்தப்பட்ட அமைச்சர் என்ற முறையிலே அவர் பதில் சொல்லலாம்.



ஆமாம். ஆகவே, 10.5 சதவிகித இட ஒதுக்கீட்டிற்குள் நான் போக விரும்பவில்லை. அதற்கு அடுத்ததாக, நம்முடைய உதயநிதி அவர்கள், இந்தத் தேர்தலிலே மிகச் சிறப்பாக பணியாற்றினார். பல்லாயிரக்கணக்கான மைல் தூரம் சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக 40க்கு 40. கொடுத்ததெல்லாம் கொடுத்தான்; நம்முடைய தளபதி கொடுத்தார்.

தமிழ்நாடு சமூக நீதிக் கொள்கைகளை நிறுவுவதிலும், அதனைச் செயல்படுத்து வதிலும் நாட்டிற்கே தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படு த்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் கல்வியறிவினை வளர்ப்பதிலும், கல்வியின் தரத்தை மேம்படுத்துவதிலும் இவ்வரசு சிறப்பாக கவனம் செலுத்தி, பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. இலவச கல்வியளித்தல், இலவச மிதிவண்டி வழங்குதல்,

### ரூ.350 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டிகள் வழங்கல்!

இலவச சீருடை வழங்குதல், இலவசமாகத் தங்கிப் பயில விடுதிகள் ஏற்படுத்தித் தருதல், கிராமப்புற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படு த்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டுகூட 7,24,000க்கு மேற்பட்ட மிதிவண்டிகளை 350 கோடி ரூபாய் அளவிலே வாங்கி, 11ம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கி

## மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு நவீன உபகரணங்கள்!

னோம். சென்ற ஆண்டு விலைக்கே, இந்த ஆண்டும் மிதி வண்டிகளை வாங்கி, மிகச் சிறப்பாக மிதி வண்டிகளின் தரம்quality of the vehicles என்று சொல்வார்களே, அந்தத் தரத்தை அதிகம் பாதுகாக்கின்ற வகையிலே, மிக அருமையான முறையிலே அந்த tender கையாளப்பட்டு, மிகத்தெளிவாக முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் பிற்படுத் ' தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஏழை மாணவர்களுக்கு, ஆதி திராவிடர் மாணவர்களுக்கு, சிறுபான்மை மாணவர்களுக்கு 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட மிதிவண்டிகளை இந்த ஆண்டு கொள்முதல் செய்திருக்கிறோம்.

சமூக நீதி என்பது Social justice for all, எல்லா சமுதாயத்தினருக்கும் சமூக நீதி தேவை. ஆகவே, நமது தமிழ்நாடு மாத்திரம்தான் 69 சதவிகித சமூக நீதியை வைத்திருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் Section 45படி 1994ல் ஒரு சட்டம் இயற்றி, Supreme Courtல் appealல் போட்டிருக்கிறார்கள். அங்கே அட்டவணையில் சேர்த்தார்கள். அவ்வாறு சேர்த்ததனால் இரத்து செய்ய இயலவில்லை. பீகாரில் இரத்து செய்துவிட்டார்கள். பீகார் மாநில உயர் நீதிமன்றம் அவர்கள் எடுத்த சாதிவாரி கணக்கெடுப்பை இரத்து செய்துவிட்டார்கள். ஜி.கே. மணி அவர்கள் சொன்னார், சாதிவாரிக் கணக்கெடுப்பை மாநில அரசு எடுக்கலாமென்று. எடுத்தால் செயல்படுத்த முடியாது. National census, அதாவது, இந்திய நாட்டினுடைய census எடுக்கின்றபொழுது, சாதிவாரி கணக்கெடுப்பு எடுத்தால்தான் நாம் எல்லா சமுதாயத்திற்கும் நீதி வழங்க முடியும். அதுதான் சமூக நீதி. அப்படிப்பட்ட நிலைமையைத் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்

. ஆகவே, மற்றவர்களைப் பற்றி நாம் கவலை கொள்ளாமல், சமூக நீதியின் அடிப்படையிலே, ஏனென்று சொன்னால் நானும் அய்யாவும் சமூக நீதிக்காக 11 மாநாடுகள் நடத்தியிருக்கிறோம். அதில் எல்லா சமுதாய மக்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, அப்படிப்பட்ட ஒரு நிலைமை வரக்கூடாது என்பதற்காக, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் பல்வேறு சமுதாய அமைப்புகள் இருக்கின்றன. பல்வேறு சாதி மக்கள் வசிக்கிறார்கள். ஆகவே, அனைவருக்கும் சமூக நீதி கிடைக்க வேண்டுமென்றால், சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் என்பது, சாதி என்பதை தனிப்பட்ட மனிதனுக்காக நான் பேசவில்லை. இருக்கின்ற தரவுகளை வைத்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை வைத்து முன்னேறுவதற்கு நாம் சாதியைப் பயன்படுத்துகிறோம். அவ்வளவுதான். இந்த இந்த சாதிகளில் இவ்வளவு பேர் இருக்கிறார்கள், பல்வேறு சாதிகள் இருக்கின்றன. ஆக சமூக நீதியை நிலைநாட்டுவதற்கு, சாதிவாரிக் கணக்கெடுப்பு தேவை. அதை மத்திய அரசு செய்ய வேண்டும். அவர்களுடைய கூட்டணியில் இருக்கக் கூடிய நண்பர்கள் தயவு செய்து, நம்முடைய பிரதமர் மோடி அரசை வலியுறுத்தி, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

INDIA கூட்டணி என்பது, நம்முடைய தலைவர் தான் ஆணிவேர். நம்முடைய முதலமைச்சர் தான் INDIA கூட்டணியின் ஆணிவேர். அது ராகுல் காந்திக்கும் தெரியும், எல்லோருக்கும் தெரியும். இங்கு வாக்களிப்பது என்பது உதய சூரியனுக்கும், கைக்கும் தானேயொழிய நபர்களுக்கு அல்ல. கூட்டணிக் கட்சியில் நபர்களுக்காக ஒரு பக்கம் வாக்குகள் விழுந்தாலும், அதில் யார் நிற்கிறார்கள் என்று பார்த்துத்தான் வாக்களிப்பார்களே தவிர, மக்கள் ஏதோ தனக்காக வாக்களிப்பதாக யாரும் நினைக்க வேண்டாம் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். 50 சதவிகிதத்தில் 20 சதவிகிதம் போக 30 சதவிகிதம். அதில் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகிதம்.

### சமூக நீதிக்கான ஒரே இயக்கம் தி.மு.க.!

இட ஒதுக்கீட்டில் 3.5 சதவிகிதம் முஸ்லிம்களுக்குக் கொடுக்கிறார்கள். மொத்தம் 19 சதவிகிதத்தில், ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகிதம், ஒரு சதவிகிதம் பழங்குடியின மக்களுக்குக் கொடுக்கிறார்கள். 3 சதவிகிதம் அருந்ததியர்களுக்குக் கொடுக்கிறார்கள். இந்த இரண்டு சட்டங்களையும் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். ஆகவே, சமூக நீதி என்பது கலைஞருக்கு சொந்தமானது. யாருக்குத் தனிப்பட்ட சொந்தம் என்றுசொன்னால், அது கலைஞர் ஒருவரை தவிர வேறு யாரையும் கொண்டுவர முடியாது. ஏனென்றால், creamy layer, IIT, IIM, AIIMS போன்றவற்றையெல்லாம் மத்திய அரசு வைத்திருக்கிறது. அதில், creamy layer வரக்கூடாது என்று சொல்கிற ஒரே இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். சமூக நீதியினுடைய பெருமையைப் பேசுகின்ற ஒரே இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

ஏனென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான்—இன்றைக்கு வி.பி. சிங் அவர்களின் பிறந்த நாள் 94 வயதுஅவருக்கு 94வது ஆண்டு. அவர் OBCOther Backward Classes தொடர்பான சட்டத்தைக் கொண்டு வந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவர் OBCக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு தொடர்பான சட்டம் கொண்டுவருவதற்கு தனது பங்கை மிகவும் ஈடுபடுத்தினார். அதனால்தான், நான் காலையில்கூட OBCக்கு சலுகை நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அந்த அடிப்படையிலே, வி.பி.சிங் அவர்களை நாம் ஏன் போற்றுகிறோம் என்று சொன்னால், ஒடுக்கப்பட்ட சமூகங்களையெல்லாம்—நாம் இன்றைக்கு உயர் நிலையை அடைவதற்கு மத்திய அரசினுடைய பதவிகளிலே வரவேண்டும் என்பதுதான். ஆகவே, மத்திய அரசினுடைய பதவிகளிலே வருவதற்கு OBCல் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை பயன்படுத்த வேண்டுமென்று அன்போடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

மருத்துவத் துறையிலேகூட, OBCல் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்ற அடிப்படையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சமூக நீதி வரவேண்டும் என்பதற்காக, இந்த ஆண்டு மத்திய அரசோடு பேசி, வாங்கிக் கொடுத்தார்கள். ஆக, 7.5 சதவிகித இட ஒதுக்கீடு கொடுத்ததைத்தவிர, தமிழ்நாட்டில் 27 சதவிகித இட ஒதுக்கீடு OBCக்கு மருத்துவத் துறையில் வாங்கிக் கொடுத்தார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதற்காக, சமூக நீதி வரலாற்றில் அவருக்கு ஒரு தனி இடம் உண்டு. சமூக நீதி என்றால் எப்படி நாம் கலைஞர் அவர்களை போற்றுகின்றோமோ, அதைப்போல, நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் நாம் போற்றியாக வேண்டும். அந்த அடிப்படையில், சமூக நீதி என்பதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு தனி இடம் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, முதலில் தமிழ்நாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 6 கோடி பேர் இருந்தார்கள். இப்போது 8 கோடியே 14 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் இருக்கின்றனர். சாதிவாரி கணக்கெடுப்பு என்பது 1931ல் எடுக்கப் பட்டது. திராவிட இன மக்கள் அனைத்து சமுதாயத்தினரும் சேர்ந்து 88 சதவிகிதம் இருக்கின்றனர். அந்த 88 சதவிகிதத்தில் நம்முடைய தமிழ் மாநிலம் ஒன்றுதான் 69 சதவிகித இட ஒதுக்கீட்டை பின்பற்றி வருகிறது. ஆகவே, மிகப் பெரிய வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட சமூக நீதிக்குச் சொந்தமான தமிழ் மண்ணிலே, சமூக நீதிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 10.5 சதவிகித இட ஒதுக்கீடு தொடர்பாக பாரததாசன் Committee ஒன்று அமைத்தார். அதற்கான தரவுகள் எல்லாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கின்றனர். அது குறித்த விளக்கங்களையெல்லாம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அதோடு முடிந்துவிட்டது.

பாரததாசன் Committee மூலம் தரவுகளெல்லாம் எடுத்து, நமக்கு report submit செய்த பிறகு, சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு எடுத்தது என்றால், நாம் இரண்டு புள்ளிவிவரங்களையும் வைத்து, எண்ணிக்கையின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்கலாம். அதுதான், நியாயமும்கூட. ஏனென்றால், எல்லா சமுதாய மக்களும் சமூக நீதியிலே வருகின்ற காரணத்தினால், அந்த அடிப்படையிலே கொடுக்கலாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருகின்ற போதுதான், தமிழ்நாடு தமிழ்நாடாக இருக்கும் என்பதை நம்முடைய ஒன்றிய அரசு புரிந்துகொள்ள வேண்டும். ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்பதெல்லாம் செல்லுபடியாகாது.

ஏனென்றால், Constitution of India என்பது அப்படியில்லை. இங்கே பல்வேறு மொழிகள் பேசுகின்ற, பல்வேறு இன மக்கள் வசிக்கின்றனர். பல்வேறு மாநிலங்கள் உள்ளன. பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. ஆந்திராவில் தெலுங்கு மொழியிலும், கர்நாடகத்தில் கன்னடமும், கேரளாவில் மலையாளமும், மேலும் ஹிந்தி உள்ளிட்ட பிற மொழிகளில் பேசுகின்ற பல்வேறு மக்கள் இருக்கின்றனர். ஆகவே, ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்பது நம்முடைய இந்தியாவிற்கு ஒத்துவராது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நம்முடைய பள்ளிகளோடு இணைக்க வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று முயற்சி செய்தோம். அது நியாயம்தான். ஆனால், 19 பேர் மதுரை, தேனி, திண்டுக்கல் இந்த மூன்று மாவட்டங்களிலும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் 299 இருக்கின்றன. 3 உண்டு உறைவிடப் பள்ளிகளை நாம் துவக்கினோம். திண்டுக்கல் மாவட்டம், குண்டமநாயக்கன்பள்ளியில் உண்டு உறைவிடப் பள்ளியை துவக்கியிருக்கிறோம். கள்ளர் சீரமைப்பு என்பது, 19 பேர் உயிர்த் தியாகம் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். இது தனியாக, எங்கள் பெயரிலே சீர்மரபினர் என்ற பள்ளியாக இருக்கட்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் முதலமைச்சர் அவர்களிடத்தில் கூறியிருக்கிறோம். அந்த மக்கள் ஏராளமான மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். சாதியில் நாம் தலையிடக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். அந்த சமுதாய மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதை செய்ய வேண்டும் என்பதில் அரசு மிகவும் வலிமையாக இருக்கிறது. சாதிப் பிரச்சினைகளில் நாம் தலையிடக்கூடாது. சாதிப் பிரச்சனைகள் வருகின்ற போது நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டுமென்பதில் அரசு தெளிவாக இருக்கிறது.

ஆனால், நம்முடைய விடுதிகள் 1,334 இருக்கின்றன. மாணவர்கள் 85,000க்கும்மேல் படிக்கிறார்கள். அவர்களுக்கு முதலமைச்சர் அவர்களிடம் கூறி, 42 கோடி ரூபாய் அதிகமாக வாங்கிக் கொடுத்திருக்கிறோம். பள்ளி மாணவர்களுக்கு 1,000 ரூபாயை 1,400 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். கல்லூரி மாணவர்களுக்கு 1,100 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தினார். ஆக கிட்டத்தட்ட 42 கோடி ரூபாய் செலவாகி உள்ளது. அதை முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். சாப்பாடு வழங்குவதில் 1,334 விடுதிகளிலும் எந்தவிதமான பிரச்சனைகளும் கிடையாது. நல்ல முறையில் மாணவர்கள் சாப்பிட வேண்டும். ஒடுக்கப்பட்டவர்கள், பிற்படுத்தப்ப ட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், சீர்மரபின மாணவர்கள் எல்லாம் நல்ல முறையில் சாப்பிட வேண்டுமென்று நம்முடைய விடுதிகளில் நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது, விடுதிகளிலெல்லாம் maintenance செய்ய வேண்டும். அதற்காக நிதி கேட்டிருந்தோம். இப்போது 25 கோடி ரூபாய் கொடுத்தார் முதலமைச்சர் அவர்கள். முன்பெல்லாம் இவ்வாறு கொடுப்பதில்லை. 5 கோடி ரூபாய் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு கொடுத்து, விடுதிகளை maintenance செய்து, bath room எல்லாம் கட்டிக் கொடுக்கிறோம். அதேபோல, 20 கோடி ரூபாய் செலவில் பொதுப் பணித் துறையின்மூலம் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாணவர்களுடைய வளர்ச்சியிலே அக்கறை கொண்டுள்ள அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. மாணவர்களுக்கு, மாணவிகளுக்கு சீருடைகள் வழங்குகிறோம்.

பித்தளை தேய்ப்புப் பெட்டிகள், நவீன சலவைகள் அமைத்தல், இலவச மின் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்குதல், ஆயத்த ஆடைகள் உற்பத்தி ஆலைகள் அமைத்தல், வீட்டு மனைகள் வழங்குதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வருடம் gasல் தேய்ப்புப் பெட்டி கொடுக்கப்போகிறோம். கைகளில் தேய்க்காமல் gas மூலம் இயங்கக் கூடிய தேய்ப்புப் பெட்டி இந்த ஆண்டு கொடுக்கப்போகிறோம். கிட்டத்தட்ட 16,842 பயனாளிகளுக்கு TABCEDOல் 115 கோடி ரூபாய் கடன் கொடுக்கிறோம். சீர்மரபினர்கள் வாரியம் வைத்திருக்கிறோம். அதில் 38,491 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். சீர்மரபினர்கள் வாரியத்தில் மட்டும் 327 பயனாளிகளுக்கு 29 இலட்சம் உதவிகள் வழங்கப் பட்டிருக்கிறது.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்